பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 20 (5—12—68) வியாழன் ★ வெளியூர்: கார்த்திகை 21 (6—12—68) வெள்ளி [இதழ்: 142

திண்டாட்டத்தைப் பெருக்கிய திட்டங்கள்!

"இளைஞர்களிடையே பெரும் அளவில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதே, நாட்டின் இன்றையக் 'கொந்தளிப்பு'க்கு அடிப்படைக் காரணமாகும்.

"சில முனைகளில் வெற்றி ஈட்டியிருந்தபோதிலும், கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் நாட்டில் 220 இலட்சம் பேர்களை வேலையற்றவர்களாக்கி விட்டிருக்கிறது!"

—உமாயூன் கபீர்
(முன்னாள் மத்திய அமைச்சர்)

இராணுவத்தில் நுழைகிறது இந்தி!

படிப்படியாகத் தீவிரப்படுத்த முயற்சியாம்!

இரா. செழியன் கேள்விக்குப் பாதுகாப்புத் துணை அமைச்சர் பதில்

புதுடில்லி, டிச. 5—

"தற்காப்பு அலுவல் துறையில், 'இந்திப் பரீட்சையில் தேறினால்தான் பதவி உயர்வு தரப்படும்' என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறதா? இந்தி மொழி பேசாத இராணுவ அதிகாரிகளை இந்த நிபந்தனை பாதித்திருக்கிறதா?"

என்று மக்களவையில் கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்கள் வினவினர்; தற்காப்புத் துணையமைச்சர் திரு. எல் என். மிஸ்ரா இக்கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"1961-ம் ஆண்டுக்குப் பிறகு, 45 வயதுக்குட்பட்ட இராணுவ அதிகாரிகள் இந்தியில் சில பரீட்சைகளில் தேர்ச்சி பெற வேண்டுமென விதிக்கப்பட்டது உண்மையே; ஆனல் இது எந்த அதிகாரியின் உத்தியோக உயர்வையும் பாதித்ததாக நான் நினைக்கவில்லை."

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:

"தற்காப்புத் துறையிலும், காலாட்படை — விமானப்படை — கப்பற்படை ஆகிய முப்படைகளிலும் படிப்படியாக இந்தியைப் பயன்படுத்துவதில் தீவிரம் காட்டுவதற்குப் பல்வேறு முயற்சிகள் செய்யப்படுகின்றன.

"தற்காப்புத் துறையில் இந்தியைப் பயன்படுத்தும்படி பார்த்துக்கொள்ள சில பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; கலைச் சொற்களை உருவாக்குவதில் தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன."

அமைச்சர் எல்.என். மிஸ்ரா மேலும் கூறியதாவது:—

"இதுவரையில், பாதுகாப்புத் துறை சம்பந்தமான தரநிலை மரபுச் சொற்களில் 1,550 சொற்கள் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன; இன்னும் 2,770 தரநிலை மரபுச் சொற்களை இந்தியில் மொழி பெயர்க்கும் வேலை மத்திய கல்வியமைச்சகத்தின் இந்திப் பிரிவு இயக்குநர் அலுவலகத்தின் மூலம் நடைபெற்றுவருகிறது."

மத்திய அரசில் வேலையில்லா அமைச்சுத் துறைகள்

கலைத்துவிட இராஜாஜி அறிவுரை

சென்னை, டிச. 5—

"மத்திய அரசில் உள்ள வேளாண்மை, சுகாதாரம், கல்வி ஆகிய அமைச்சுத் துறைகள் கலைக்கப்பட்டுவிட வேண்டும்"

என்று இராஜாஜி கருத்தறிவித்துள்ளார்.

மத்திய அமைச்சுத் துறைகளைக் கலைப்பதுபற்றி ஆந்திரம் தெரிவித்துள்ள யோசனையை வரவேற்று அவர் இவ்வார 'சுயராஜ்யா' இதழில் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"அரசியல் சட்டரீதியாக மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள துறைகளுக்கு டில்லியில் மத்திய அமைச்சுத் துறைகள் தேவையில்லை."

"அப்படி அமைச்சுத் துறைகள் இருந்தாலும், அவற்றுக்கு வேலையில்லை; வேலையில்லாமல் இருக்கும் இடத்தில் நல்லவை ஏற்பட முடியாது; அவை தியவற்றின் இருப்பிடமாகிவிடும்."

"எனவே வேளாண்மை, சுகாதாரம், கல்வி அமைச்சுத் துறைகளைக் கலைத்துவிட்டு அவற்றிற்குப் பதில் இளைய அமைச்சர்களை (இணை அமைச்சர் அல்லது துணை அமைச்சர் போன்றவர்களை) நியமித்து, மாநிலங்களுக்குச் சென்று வரவும் மாநில நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும் வழி செய்யலாம்."

விடைத் தாள் திருத்தும் புதிய முறை

பல்கலைக் கழகமும் ஏற்கும்

திருச்சி, டிச. 5—

"தேர்வு விடைத் தாள்களை ஒரே இடத்தில் திருத்தி 'மார்க்' தரும் திட்டத்தை, 'பி.யு.சி.–க்கும் விரிவுபடுத்தலாம்' என்ற யோசனையை சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளார்"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

தேர்வு விடைத் தாள்களை, இது போன்று ஒரே இடத்தில் திருத்தி மதிப்பிடும் முறை, சென்ற ஆண்டு மார்ச் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வின் போது செயலுக்கு வந்தது.

தமிழ்நாட்டின் எல்லையில் காவல்

கேரள பயங்கரவாதிகள் நுழையாதிருக்க நடவடிக்கை

"கேரள பயங்கரவாதிகள் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவ முயன்றதாக இதுவரையில் தகவல் எதுவும் இல்லை"

என்று இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆர். எம். மகாதேவன் கூறினர்.

"கேரள — தமிழ்நாட்டு எல்லையில் போலீசு நிலையங்களுக்கு அதிக ஆயுதப் போலீசுப் படைகளை அனுப்பிப் பலப்படுத்தியிருப்பதாகவும், ஊடுருவலைத் தடுக்கவே இவ்வாறு செய்திருப்பதாகவும் அவர் கூறினர்.

காந்தீயவாதிகளின் சாயம் வெளுக்கிறது!

கள்ளுக்கடையைத் திறக்கச் சட்டமன்றத்தில் கோரிக்கை

ஐதராபாத், டிச. 5—

ஆந்திர சட்டமன்ற மேலவையில், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெறுகையில், காங்கிரசு உறுப்பினர்கள், 'மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும்' எனக் கோருவதில் முன்னணியில் இருந்தனர்!

அண்மைக்காலம் வரையில் நலகொண்டா மாவட்டக் காங்கிரசுக் கமிட்டித் தலைவர் பதவியிலிருந்த வி. புருஷோத்தம் ரெட்டி என்பவர் 'குறைந்த அளவு அடுத்த ஏழு ஆண்டுகளுக்கேனும் மதுவிலக்கை ரத்து செய்யலாம்' என வேண்டுகோள் விடுத்தார்; தமது கோரிக்கைக்கு ஆதரவாக, 'ஒவ்வொரு கிராமத்திலும் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகிறது; குடிப் பழக்கம் உள்ளவர்கள், தீமை விளைவிக்கும் எல்லாவிதப் பானங்களையும் அருந்துகின்றனர்' எனக் கூறினர்.

திருமதி கனகரத்தினம்மா என்ற காங்கிரசு உறுப்பினரும், இந்தக் கோரிக்கையை ஆதரித்துப் பேசினர்.

பரிசுச் சீட்டு

8-வது வரிசை வருகிறது

சென்னை, டிச. 5—

தமிழக அரசின் பரிசுச் சீட்டு மூன்ருவது குலுக்கலுக்கு இதுவரையில் ஏழு வரிசைச் சீட்டுகள் விற்பனைக்கு வெளியிடப்பட்டுவிட்டன.

அடுத்து, 'ஏஏ', 'ஏபி' ஆகிய இரு வரிசைச் சீட்டுகள் டிச. 6-ம் நாளன்று, அரசாங்கத்தால், கருவூலங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பறங்கிமலை காவல் நிலையத்துக்குப்பரிசு

சென்னை, டிச. 5—

'தமிழகத்திலேயே சிறந்த போலீசு நிலையம்' என்று பறங்கிமலை போலீசு நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

1968-ம் ஆண்டுக்கான சிறப்புப் பரிசை நாளை கவர்னர் வழங்குவார்.

சென்ற ஆண்டில் செம்பியம் பெற்ற சுழற் கேடயம், பறங்கிமலைக்குப் போகும்.

இன்னும் இழிபறி நிலையிலேயே நான்காவது திட்டம்

இறுதியில் அளவு குறையலாம் எனத் தகவல்

சென்னை, டிச. 5—

நான்காவது திட்டத்தை மேலும் ஓராண்டுக்கு ஒத்திவைக்க வேண்டியிருக்கும்போல் தோன்றுகிறது!

அண்மையில் டில்லியில் நடந்த பேச்சுக்களில், மாநிலங்கள் அதிக வரி விதித்து வருவாயைப் பெருக்க மறுத்ததோடு, மத்திய அரசிடமிருந்து அதிக நிதி உதவியையும் கோரியதால் ஒரு முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டது.

ஒரு மாநிலம், 'திட்டத்தைத் துவக்குவதையே ஒத்திவைக்கலாம்' எனக் கூறியது; மற்றொன்று, 'ஐந்தாண்டுத் திட்டத்திக்குப் பதிலாக, ஓராண்டுத் திட்டங்களாக்கலாம்' எனக் கூறியது.

வசதிகளுக்கேற்ப திட்ட முதலீட்டைக் குறைக்கப் பல மாநிலங்கள் தயாராக இருக்குமென்ருலும், மக்கள் மனத்தில் அதிக ஆசையைக் கிளப்பிவிட்டு ஏற்கனவே பிரசாரம் நடந்துவிட்டதால், அவை பகிரங்கமாக அம்மாதிரிச் சொல்லத் தயங்குவதாகத் தெரிகிறது.

இறுதியில், மத்திய — மாநில திட்டங்களின் அளவைக் குறைக்கவே நேரிடலாம் எனக் கருதப்படுகிறது.

கச்சத் தீவு சிக்கல்

தமிழக அரசுடன் டில்லி தொடர்பு

புதுடில்லி, டிச. 5—

"கச்சத் தீவு பிரச்சினைபற்றி இந்திய அரசு, தமிழக அரசுடன் தொடர்புகொண்டிருக்கிறது"

என்று, மக்களவையில், வெளிநாட்டுத் துறைத் துணையமைச்சர் சுரேந்திரபால் சிங் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இப்பிரச்சினைபற்றி இலங்கை அரசுடன், நட்பு முறையில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த எண்ணியிருப்பதால், அவைக்கு இதுபற்றி 'வெள்ளை அறிக்கை' எதுவும் அளிக்க வேண்டிய அவசியமில்லை என அரசு கருதுகிறது."

வில்சன் இந்தியா வருகை

நாடாளுமன்றத்தில் தகவல்

இலண்டன், டிச. 5—

"இந்தியாவுக்கு எப்போது செல்லுவேன் என்பதை, இப்போது சொல்லுவதற்கில்லை; ஆனல் இந்தியாவுக்குச் செல்லக்கூடிய நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்"

என்று பிரிட்டிஷ் தலைமையமைச்சர் வில்சன், நாடாளுமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிருர்.

சனநாயக மரபை அழித்துவிடாதீர்!

அரசியல் சட்டத்தைச் சுட்டிக்காட்டி ஆதிக்கம் செலுத்த எண்ணாதீர்கள்!

மத்திய அரசு தவறிழைத்தால் கேட்பவர் யார்?

நாடாளுமன்றத்தில் முரசொலி மாறன் உரிமை முழக்கம்

புதுடில்லி, டிச. 4—

"ஒரு மாநிலத்தில், சட்டம்--ஒழுங்கு சீர்குலைந்து விட்டால் மத்திய அரசு தலையிடுகிறது; அதே போல் மத்திய அரசு நேரடி நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளில் போலீசார் வேலை நிறுத்தம் செய்தபோதும் சரி--புதுடில்லியில் பசுவதை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போதும் சரி--அல்லது குடியரசுத் தலைவரின் ஆளுகைக்குட்பட்ட மாநிலத்திலும் சரி--சட்டம், ஒழுங்கு சீர்குலைந்தால் யார் தலையிடுவது? தளபதி குமாரமங்கலம் தம் இராணுவத்துடன் தலையிடுவாரா?

"என் தாய்மொழியில் ஒரு பழமொழி சொல்வார்கள்; 'மாமியார் உடைத்தால் மண்குடம்--மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்று! நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு ஒரு கோபக்கார மாமியாராகவும், மாநிலங்கள் சாதுவான மருமகளாகவும் ஆக்கப்பட்டு விட்டன!

"பிரிட்டனில் அரசரோ அரசியோ தவறு செய்ய முடியாது; ஆனால், இந்தியாவில் மத்திய அரசு தவறு செய்ய முடியும்! மாநிலங்களிடத்துத் தொடர்ந்து நம்பிக்கையற்றும் சந்தேகத்துடனும் நடந்துகொள்வதன் அடிப்படையிலேயே அரசியல் அமைப்புச் சட்டம் அமைந்துள்ளது!

"எனவே, மத்திய அரசு--மாநில அரசு உறவுகள் நலிவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின் குறைபாடுகளே காரணங்களாகும்!"

என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் முரசொலி மாறன் சுட்டிக்காட்டினர்.

'மத்திய—மாநில அரசுகளின் உறவு நிலை குறித்து ஆராய ஓர் குழு அமைக்க வேண்டும்' என்னும் தனி நபர் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் அவர் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:—

"இன்றையத்தினம் நாம் ஒரு முக்கிய பிரச்சினையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம்; மத்திய அரசு – மாநில அரசுகள் உறவு பற்றிய பிரச்சினை விரைவில் ஒரு பெரும் பிரச்சினையாக வளரக்கூடும்; இதுவரையில் அந்த அளவுக்கு அப்பிரச்சினை முற்றாமல் இருக்குமேயானால்—சில ஆண்டுகளுக்கு முன் இப்பேரவையில் மத்திய அரசு – மாநில அரசுகள் உறவு பற்றிய பிரச்சினை குறித்து விவாதம் நடந்திருக்குமேயானால்—ஒரு காலக் கணிப்பு வழுவின் அங்கமாகக் கருதப்பட்டிருக்கும்; ஏனெனில், அப்போது ஒரே கட்சியின் ஏகபோக ஆதிக்கமும், நேருவின் செல்வாக்கும், பஞ்சாயத்து முதல் எல்லா மாநில அரசுகளிலும் மத்திய அரசிலும் ஆட்சி செலுத்திய நேரமாகும்.

பிறகு, அது ஓர் அரசியல் அமைப்புச் சட்டப் பிரச்சினையாகவும், கல்வித் துறைக்கு ஒரு சுவையான பாடமாகவும் நிலைத்துவிட்டது.

இப்போது நான்காவது பொதுத் தேர்தல் முடிந்த பிறகு அது ஓர் அரசியல் பிரச்சினையாக -- அன்றாட அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துவிட்டதைக் காண்கிறோம்!

ஒரே ஒரு நாள் நடைபெற்ற அடையாள வேலைநிறுத்தத்துக்காக அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதானது துரதிருஷ்டமானமாகும். அந்நிகழ்ச்சி பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களில் நிரந்தரமான வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது! அத்துடன், அது நமது கூட்டாட்சி முறையில் அழிக்க முடியாத ஒரு கறையாகப் படிந்துவிட்டது!

கேரளத்துக்கும் -- மத்திய அரசுக்கும் இடையே நிலவும் சிக்கல், ஒரு சில அம்சங்களைச் சுற்றியே எழுந்துள்ளது.

அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன் மத்திய அரசு, மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்க வேண்டுமா என்பதை மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

இரண்டாவதாக ஓர் உத்தரவைப் பிறப்பிப்பதற்கும் ஒரு சிலரைக் கைது செய்வதற்கும் மற்றும் சிலரை விட்டுவைக்கவும் மத்திய அரசு தன் விருப்பப்படி செயலாற்றலாமா என்பதையும், அதே மாதிரியான செயலை மாநிலங்கள் செய்ய முடியுமா என்பதையும் மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

மூன்றாவதாக, மத்திய அரசு தன் போலீசுப் படையை மாநில அரசின் விருப்பத்தைத் தெரிந்துகொள்ளாமலேயே அனுப்பிவைக்க அதிகாரம் உண்டா என்பதாகும்.

இதற்கு, மதிப்பிற்குரிய சட்ட அமைச்சர், 'ஏன் கூடாது?' என்று வினவக்கூடும்.

கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு அவர்கள், 'அவசரச் சட்டப் பிரகடனம் அரசியல் சட்டப் பூர்வமாகச் செல்லத்தக்கதா என்று யாரும் கேட்கவில்லை; அவ்வுத்தரவின் கடுமை குறித்து எல்லோருமே உணர்ந்திருக்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார்.

'மத்திய அரசின் உத்தரவுக்கு உடனடியாக மற்றவர்கள் கீழ்ப்படிந்தாக வேண்டும்' என்று அது கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், அதுபோலவே பழங்குடி மக்கள் -- சிறுபான்மை மக்களின் கல்வி வசதிகள், மத்திய ஆட்சி மொழி விவகாரம் முதலியவைகளிலும் மாநிலகளுக்கு உத்தரவிட வேறு சில அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருக்கின்றன.

இதுபோன்ற உத்தரவுக்குப் பணியாத மாநிலத்தின் கதி என்னகும் என்பதும் நமக்குத் தெரிந்ததே. அம் மாநிலம் அரசியல் சட்டபூர்வமாகத் தண்டிக்கப்பட்டுவிடும்!

பிறகு மத்திய அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 365-வது பிரிவின்படி அம் மாநிலத்தில் நிர்வாகம் குலைந்துவிட்டதாகக் காரணம் காட்டி, குடியரசுத் தலைவர் ஆட்சியினைக் கொண்டுவந்துவிடும்!

"அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏதாவதொரு விதியின் கீழ் மத்திய அரசு பிறப்பிக்கும் உத்தரவுக்கு இணங்கவும், அல்லது அதைச் செயல்படுத்தவும் ஏதாவது மாநிலம் தவறுமேயானால், 'அம்மாநிலத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப ஆட்சியை நடத்திச் செல்ல முடியாத நிலை எழுந்துள்ளது' எனக் கொள்வதற்குக் குடியரசுத் தலைவருக்கு சட்டபூர்வமாக அதிகாரமுண்டு" என்பதே அரசியல் சட்டத்தின் 365-வது விதி.

"சனநாயகமும் கூட்டாட்சி முறையும் இந்நாட்டில் வெற்றி பெறவேண்டுமானல், மத்திய அரசுக்கும்—மாநிலங்களுக்கும் உள்ள உறவு முறையை விவேகத்துடன் அமைத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, கட்சி மனப்பான்மையுடன் அல்ல"

என்று முன்னாள் தலைமை நீதிமன்றத் தலைமை நீதிபதி கஜேந்திர கட்கர் குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் இந்தப் பிரிவு தனித்தன்மை வாய்ந்த ஒன்று; இதுபோன்றதொரு அமைப்பு எந்த ஒரு கூட்டாட்சி முறை உள்ள நாட்டுச் சட்டத்திலும் இல்லை!

அது, டேமாக்கிளீசின் கத்தியைப்போல் மாநிலங்களின் கழுத்துக்கு நேராகத் தொங்கிக் கொண்டிருக்கிறது!

புகழ்பெற்ற வழக்கறிஞரான செதல்வாட்,

"மத்திய அரசு பிறப்பிக்கும் உத்தரவு சட்டத்துக்குப் புறம்பானதாகவும், நாட்டு மக்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பதாகவும் இருப்பினும், மாநிலங்கள் அவற்றைச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது"

என்று அண்மையில் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவை எல்லாம் அரசியல் அமைப்புச் சட்டப்படி இருக்கலாம்; ஆனால் அரசியல் அமைப்புச் சட்டத்தின் உள் தத்துவத்துக்கு உட்பட்டதாக உள்ளதா?

"நாடாளுமன்றம் கூடியில்லாத போது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 123-வது பிரிவின்படி குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் பிறப்பிக்கலாம்" என இருக்கிறது. குடியரசுத் தலைவர் எப்படித் தம் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்? நிச்சயமாக மத்திய அமைச்சரவையின் ஆலோசனையின்படி அது முடியும்.

"நாடாளுமன்றம் நடைபெறும் சமயத்தைத் தவிர மற்ற எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவர், 'அப்போது நிலவும் நிலைமை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுளளது' என்று கருதுவாரேயானல், அந்நிலைமைக்கு ஏற்ப அதுபோன்றதொரு அவசர உத்தரவை பிறப்பிக்கலாம்" என்பதே அது சம்பந்தப்பட்ட அரசியல் சட்ட விதியாகும்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவரைப்போல் நடந்துகொள்ள விரும்பும் ஒரு குடியரசுத் தலைவர் நமக்கிருந்தால் என்ன நடக்கும்? அமைச்சரவையைக் கலக்காமலேயே அவர் அவசர உத்தரவு பிறப்பிக்க முடியும். அதுபோல நிலைமை நமக்கு ஏற்பட வேண்டுமா?—நிச்சயமாக வேண்டாம்.

நல்ல வலுவான மரபுப்படி, 'குடியரசுத் தலைவர், இதுபோன்ற தம் கடமைகளை அமைச்சரவையின் ஆலோசனையின்படி செய்யலாம்' என்னும்போது, அதே வலுவான மரபுக்காக அவசரச் சட்டம் பிறக்குமுன் மத்திய அமைச்சரவையும் மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்கவேண்டும்; ஏனெனில், மாநில அரசுக்குள்ள சில அதிகாரங்களைக்கூட அவசர உத்தரவு பாதிக்கச் செய்கிறது.

இன்றைய சிக்கல், மத்தியிலுள்ள காங்கிரசு அரசுக்கும் -- மாநிலங்களிலுள்ள காங்கிரசல்லாத அரசுகளுக்கும் இடையே நிலவுவதாகும்; நாளை இந்நிலை தலைகீழாக மாறக்கூடும்; அப்படிப்பட்ட மாற்றம், நடக்கமுடியாத ஒன்று அல்ல; ஒருகால், மத்தியில் காங்கிரசல்லாத அரசும், மாநிலத்தில் காங்கிரசு அரசும் இருக்கின்றன என்றால், காங்கிரசு உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்வார்கள்?

'அவசரச் சட்டம் பிறப்பிக்குமுன் அவர்களைக்—கலந்தாலோசிக்க வேண்டும்' என்று கேட்பார்களா மாட்டார்களா?

'மத்திய ரிசர்வ் போலீசை மாநிலத்துக்கு அனுப்புமுன் தங்களைக் கலந்தாலோசிக்கவேண்டும்' என்று கேட்பார்களா மாட்டார்களா?

நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு நிலைமை மாறியுள்ளது. உண்மையில் நமது கூட்டாட்சித் தத்துவமே நான்காவது தேர்தலுக்குப் பிறகுதான் செயல்படத் துவங்கியுள்ளது.

இன்னும்கூட நாம், சனநாயக உணர்ச்சியின் மரபினை உருவாக்கவேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். இந்த உணர்வோடுதான் இப்பிரச்சினையை நோக்க வேண்டுமேயன்றி, காங்கிரசே எப்போதும் ஆண்டுகொண்டிருக்கும் என்ற உணர்வோடு அல்ல!

சட்டம் --- ஒழுங்கு விவகாரம் மாநிலங்களுக்குள்ள உரிமை. இப்போது முதல் தடவையாக மத்திய ரிசர்வ் போலீசு ஒரு மாநிலத்துக்குள் அதற்குத் தெரியாமலே அனுப்பப்பட்டுள்ளது.

நமது சட்ட அமைச்சர் கோவிந்த மேனனிடம் கொச்சியில் இது பற்றிக் கேட்டபோது, 'மத்திய ரிசர்வ் போலீசைப் பயன்படுத்துவதென்பது ஒரு சங்கேதக் குறி' என்று பதிலளித்திருக்கிறார்.

'சங்கேதக் குறி' எதற்காக? மாநிலங்களிலுள்ள காங்கிரசு அல்லாத அரசுகளைக் கவிழ்ப்பதையே பரம்பரைச் சொத்தாகக் கொண்டுள்ளது இந்த அரசு என்பதைக் காட்டவா?

தன் விருப்பப்படி -- சவுக்கடிக்கேற்ப மாநிலங்களை ஆட்டிவைக்கவேண்டும் என்பது மத்திய அரசின் எண்ணமா?

புதுடில்லியில் பரவியுள்ள ஏகாதிபத்திய மனப்பான்மையின் ஒரு பகுதியே இது! இதற்காகத் தனிப்பட்டவர்களிடம் குற்றம் காண நாங்கள் விரும்பவில்லை! இது நமது அரசியல் அமைப்பின் விளைவு!

முன்னாள் முதலமைச்சர் ஒருவரின் புகாரை இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன்—

"நாட்டின் பொது முயற்சிகளில் மாநில அரசுகளையும் பங்குதாரர்களாக நினைத்து நடத்தும் விருப்பம் குறைந்துவிட்டது; அதற்குப் பதிலாக, மாநிலங்களைச் சக்தியற்றவைகளாகவும், அவைகளே சொந்தமாக முடிவு எடுப்பதற்கு இயலாமல் செய்வதற்கும் விருப்பம் வளர்ந்து வருகிறது"

இது, சுதந்தர இந்தியாவுக்கு எல்லாத் தலைமை அமைச்சர்களையும், பல அமைச்சர்களையும், ஆளுநர்களையும் அளித்த மிகப் பெரிய மாநிலமான உ. பி.-யின் முன்னாள் (காங்கிரசு) முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணானந்தின் புகாராகும்.

அவரது நிலையே அப்படியானல், மற்றக் காங்கிரசல்லாத மாநில முதலமைச்சர்களின் நிலைமை என்னவாக இருக்கும்?

நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு மிக மோசமடைந்துள்ள இந்நிலை, மிக ஆபத்தான போக்காகும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 263-வது பிரிவு, மாநிலங்களுக்கிடையேயும், மாநிலங்கள்—மத்திய அரசுக்கு இடையேயும் ஏற்படுகின்ற தகராறுகளை விசாரிப்பதற்கு அண்டை மாநிலக் குழு அமைக்க வகை செய்கிறது; இக்குழு ஏன் இன்னும் அமைக்கப்படவில்லை?

என் தாய்மொழியில் ஒரு பழமொழி உண்டு—'பாம்பின் கால் பாம்பறியும்' என்று.

ஒரு காங்கிரசு அமைச்சரின் மனப்போக்கை மற்றொரு காங்கிரசு அமைச்சர்தான் நன்கு புரிந்துகொள்வார். அதுபோல், அண்டை மாநில விசாரணைக் குழு அமைக்கப்படாததற்கான காரணம், காங்கிரசு அமைச்சருக்குத்தான் தெரியும்!

"அண்டை மாநில விசாரணைக் குழுவில் மத்திய அரசும் மாநில அரசுகளும் ஒன்றுக்கொன்று சம தகுதியுடன் இருக்க வேண்டுமே என்கிற பயம்தான் காரணமாக இருக்கலாம்; அங்கு மத்திய அரசு ஆதிக்கம் செலுத்த முடியாது!"

இது, அகமதாபாத்திலுள்ள ஹரோல்டு லாஸ்கி அரசியல் விஞ்ஞானக் கழகத்தில் கே. சந்தானம் பேசியது.

அண்டை மாநில விசாரணைக் குழு அமைக்காததற்கு இது தான் காரணமா?

இக் குழு இனி எப்போதுமே அமைக்கப்படாவிடில், அரசியல் அமைப்புச் சட்டம், மத்திய அரசு மாநில அரசு உறவு நிலை, அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் ஆகிய பிரச்சினைகளைப் பற்றிப் பரிசீலிக்க ஓர் உயர்மட்டக் குழு அமைக்கும்படி நாங்கள் வற்புறுத்துவோம்.

'மத்தியில் குறைந்த அதிகாரம் வேண்டும்' என்னும் நாங்கள் நாட்டின் ஒருமைப்பாட்டினையும் சுதந்தரத்தையும் காப்பதில் யாருக்கும் பிற்பட்டவர்களல்லர்!"

புது வலிவு பெறுவோம்!

மேலும் உயிர்த் துடிப்புடன் -- மேலும் நம்பிக்கையுடன் நாம் நம்மையே தூய்மைப்படுத்திக் கொள்வோம்; இப்படிச் செய்தால், நாளுக்கு நாள் நாம் புது வலிமை பெறுவோம்!

—காந்தியார்

காலக்கெடு இன்றி முழு மதுவிலக்கு

மத்திய அரசின் போக்கில் புதிய திருப்பம்?

டில்லியிலிருந்து திரும்பிய அமைச்சர் மாதவன் தகவல்

சென்னை, டிச. 4—

"காலக்கெடு எதுவும் இல்லாமல் முழு மதுவிலக்கை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எல்லா மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு ஆலோசனை கூறக்கூடும்; மத்திய மதுவிலக்கு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நடந்த விவாதங்களின் போக்கிலிருந்து நான் இவ்வாறு கருதுகிறேன்"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் நிருபர்களிடம் கூறினர்.

"கொள்கைகளின் அடிப்படையில் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதே நமது நோக்கமாக இருக்கவேண்டும்" என்று அவர் கூறினர்.

"புதிதாக மதுவிலக்கை செயல்படுத்த முன்வரும் மாநிலங்களுக்கு மதுவிலக்கின் காரணமாக ஏற்படும் இழப்பில் 50 சதவிகிதத்தை அளிக்க மத்திய அரசு முன்வருவது நியாயமல்ல என்றும், ஏற்கனவே மதுவிலக்கை நடைமுறைப்படுத்திவரும் மாநிலங்களுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டுவதாக, அது இருக்கும் என்றும் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தினேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

"இழப்பீட்டுத் தொகை எல்லா மாநிலங்களுக்கும் அளிக்கப்படவேண்டும்; குறிப்பாக, தூண்டுதல் எதுவும் இல்லாமல் ஏற்கனவே மதுவிலக்கை செயல்படுத்திவரும் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும்; இவ்வாறு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்குமானல் மைசூர் மாநிலம் மதுவிலக்கை ரத்து செய்திருக்காது; மகாராட்டிரம் மதுவிலக்கை தளர்த்த ஆரம்பித்திருக்காது" என்றும் அவர் சுட்டிக் காட்டினர்.

பஞ்சாலைகளின் நெருக்கடி தீர நடவடிக்கை

வரிச் சலுகை அளிக்கத் தமிழக அரசு முடிவு

சென்னை, டிச. 4—

"தமிழ்நாட்டில் பஞ்சாலைகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கவும், மூடப்பட்டுள்ள 26 ஆலைகளை மீண்டும் திறப்பதற்கும், நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் மற்ற ஆலைகள் மூடப்படாமல் தடுப்பதற்கும் உதவிபுரியத் தமிழக அரசு வரிச் சலுகைகள் அளிக்கும்"

என்று, சட்ட அமைச்சர் செ. மாதவன், நிருபர்களிடம் தெரிவித்தார்.

அண்மையில் தாம் டில்லி சென்றிருந்தபோது துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங் ஆகிய இருவரிடமும் தமிழ்நாட்டு அரசின் சார்பில் இந்த முடிவைத் தெரிவித்திருப்பதாகவும் கூறினர்.

இனி நூல்மீது மத்திய உள்நாட்டுச் சுங்கத் தீர்வையைக் குறைத்து ஆலைகளின் நெருக்கடியைத் தீர்க்க மத்திய அரசு முன்வரவேண்டும் என்று மாநில அரசு எதிர்பார்ப்பதாக அமைச்சர் கூறினர்; இது பற்றித் திட்டக் குழுவுடன் விரைவில் விவாதிக்கப்படும் என்றும், இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளத் தமிழ்நாட்டு அரசுப் பிரதிநிதிகளுக்கு வாய்ப்புத் தரப்படும் என்றும் தினேஷ் சிங் தம்மிடம் தெரிவித்ததாக அவர் மேலும் கூறினர்.

ஊட்டச் சத்துக் குறைவை நிறைவு செய்ய இயலுமா?

மீன் வள வளர்ச்சிக்குப் பெரு முயற்சி

இந்தியாவில் புரதச் சத்து உணவைப் பொறுத்தவரையில், சராசரியாகத் தனி நபருக்குக் கிடைப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. புரதச் சத்து அதிகமாகக் கிடைக்கும்பொருட்டு மீன்வளத் துறையை நாம் நன்கு வளர்ச்சியுறச் செய்யவேண்டும்.

1951-ஆம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 7,52,000 டன் மீன் கிடைத்தது; 1963-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டுவரை சராசரியாக ஆண்டுக்கு 12,97,000 டன் மீன் கிடைத்தது; 1967-ஆம் ஆண்டில் இது 14,23,000 டன்னுக இருந்தது.

ஆனல் இன்று தனி நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 7½ கிராம் மீன் தான் கிடைக்கிறது. இந்த விகிதத்தில்கூட, 1971-ஆம் ஆண்டில் 15,60,000 டன் மீன் தேவைப்படும். ஏனென்றல், அப்போது மக்கள் 56-கோடியாகப் பெருகியிருக்கும்.

உண்மையில் ஒருவர் நாள்தோறும் 75 கிராம் புரதச் சத்து உட்கொள்ள வேண்டும் என்று நிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள்.

நம் நாட்டின் மக்கள் தொகையில் 60-சதவிகிதத்தினர் மீன் உட்கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். புரதச் சத்தில் பாதி மீனிலிருந்து கிடைக்கிறது என்றும் வைத்துக்கொள்வோம்; அப்படியென்றல், 1971-ம் ஆண்டு வாக்கில் நமக்கு ஆண்டுக்கு 46 இலட்சம் டன் மீன் தேவைப்படும்.

நமது பணி எவ்வாறு பெரியது என்பதைத்தான் இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எல்லாத் துறைகளிலும் மீன் வள வளர்ச்சிக்காக நவீன உத்திகளை நாம் பின்பற்ற வேண்டும்.

பல்வேறு நிலைகளிலும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகச் சிப்பந்திகளுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

பயிற்சி பெற்ற சிப்பந்திகள் தேவையைச் சமாளிக்கும் பொருட்டு, மத்திய அரசும், மாநில அரசுகளும் பயிற்சி நிலையங்களை அமைத்திருக்கின்றன.

சூரியனை ஆராய முயற்சி

அமெரிக்கா அனுப்பும் புதிய விண்கலம்

வாஷிங்டன், நவ. 7—

சூரியப் பிழம்புகள் ஏற்படப் போவது குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை செய்ய வழி காண அமெரிக்கா இவ்வாரத்தில் புதிய விண்கலம் ஒன்றைச் சூரியனை ஆராய விண்வெளிக்கு அனுப்பு். கிட்டத்தட்ட அதே நேரத்தில் ஏற்கனவே விண்வெளியில் பணியாற்றிவரும் மற்றெரு செயற்கைக் கோள், பூமிக்குத் தெரியாத சூரியனின் மறு பக்கத்துக்குச் சென்று ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைப் புரியும்!

புதிய செயற்கைக் கோள், பயோனியர்-9; இது ஒரு தானியங்கிப் பொறி விண் வீதியில் சூரியனை வலம் வருமாறு இன்று கென்னடி முனையிலிருந்து புதிய கோளை அமெரிக்க விண்வெளி நிலையம் (நாஸா) செலுத்தியது.

இதே நேரத்தில், 1965-ல் செலுத்தப்பட்ட ஆருவது பயோனியர், சூரியனின் மறுபுறத்துக்குச் செல்லத் தொடங்கும். பூமியிலிருந்து 26 கோடியே 30 இலட்சம் கிலோமீட்டர் தொலைவில் சூரியன் இருக்கிறது.

ஆருவது 'பயோனியர்', சூரியப் புலம் வழியாக மின்காந்த அலைகளை அனுப்பி வருகிறது. இந்த வானொலி அலைகளை ஆராய்ந்தால், சூரியனைச் சுற்றியுள்ள வாயுக்கள் நிரம்பிய வெளி வட்டம் எதனுல் அல்லது எவற்றல் ஆனது என்பது குறித்து புது விவரங்கள் கிடைக்கும்.

நவ. 26-ம் நாள் ஆருவது பயோனியர் சூரியனுக்குப் பின்னல் மறையத் தொடங்கும் முன்பும், பின்னலிருந்து வெளிவந்த பின்பும் கிடைக்கும் வானொலி அலைகளை அளந்தறிந்து ஆராய்வார்கள். கலிபோர்னியா மாநிலத்தில் கோல்டுஸ்டோன் என்னுமிடத்திலுள்ள மாபெரும் ரேடியோ டெலஸ்கோப் பொறி மேற்சொன்ன வானொலி அலைகளை அளந்தறியும்.

வடிவமும் எடையும்

9-வது பயோனியர் 'டமாரம்' வடிவிலுள்ளது; அதன் எடை 66 கிலோகிராம். சூரியனை ஆராய்வதற்கு ஏழு சோதனைகள் நடத்த அதில் கருவிகள் உண்டு.

1965-ல் செலுத்தப்பட்ட 6-வது பயோனியர், 1966 ஆகஸ்டில் செலுத்தப்பட்ட 7-வது பயோனியர், 1967 டிசம்பரில் செலுத்தப்பட்ட 8-வது பயோனியர் ஆகிய கோள்களுடன் 9-வது பயோனியர் கோளும் சேர்ந்து கொள்ளும்.

சூரியப் புயல்கள் பற்றி முன்னெச்சரிக்கை செய்வதற்காக அனுப்பப்பட்ட கோள்களின் தொகுப்பு இது; இவை அனைத்துமே பணியாற்றி வருகின்றன. கோள் விட்டுக் கோள் சென்று நடப்பில் செயல்படும் அமெரிக்கப் பொறிகள், தற்போது இவை ஒன்றுதான்.

11 ஆண்டுகளுக்குப் பின்பு, அடுத்த ஆண்டில் சூரியனில் இயக்கங்கள் உச்சநிலை அடையும் போது இந்த நான்கு பயோனியர் கோள்களும் சுறுசுறுப்பாகச் செயல்படுமென எதிர்பார்க்கிறார்கள். கிட்டத்தட்ட இதே சமயத்தில்தான் அமெரிக்க விண்வெளி விமானிகள் தம் நிலவுப் பயணத்தைத் தொடங்குவார்கள்.

விவசாயிகட்குக் கூலி நிர்ணயம்

சட்டமியற்றுவதில் உள்ள சங்கடம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி விளக்கம்

திருவாரூர், டிச. 4—

'விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்து, சட்டம் இயற்றுவது இயலக் கூடியதல்ல"

என்று விவசாய அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி கூறினர்.

திருவாரூரிலிருந்து 12 மைலில் உள்ள கச்சனம் கிராமத்தில் ஒரு விழாவில் பேசுகையிலேயே இவ் கூறினர்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:—

"அண்மைக் காலத்தில் விவசாயத் தொழிலாளர் கூலி சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்பட்டுள்ளன; இப்பிரச்சினையில் அரசாங்கம் சட்டம் இயற்ற முடியாது.

மாவட்டத்துக்குள்ளேயே இடத்துக்கு இடல் கூலி விகிதம் மாறுபடுகிறது; பல பிரச்சினைகளும் அதேமாதிரி மாறுபடுகின்றன. இவற்றைப்பற்றி பேசி சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும்; சட்டம் இயற்றினல் அது பலன் தராது."

குழந்தை வளருகையில் ....!

குழந்தை வளரும்போது சுற்றுப்புறச் சூழ்நிலை முக்கியப் பங்கு வகிக்கத்தான் செய்கிறது; ஆனல், அதன் முன்னேர்கள் தரும் பரம்பரைக் குணங்களை வைத்துக்கொண்டுதான் வாழ்க்கையைத் துவக்குகிறது!

—காந்தியார்

மாநிலத் தமிழாசிரியர் மாநாடு

டிச. 27-ல் சென்னையில் நடைபெறும்

சென்னை, டிச. 3—

மாநிலத் தமிழாசிரியர் கழகப் பதினேராம் மாநாட்டின் வரவேற்புக் குழு, வரவேற்புக் குழுத் தலைவர் திரு. மா. கி. தசரதன் எம்.ஏ. தலைமையில், சென்னைப் பச்சையப்பன் உயர் பள்ளியில் கூடியது.

மாநிலக் கழகத்தின் பொதுச் செயலாளரும் மாநகரக் கழகத்தின் தலைவருமாகிய பேராசிரியர் அன்பு கணபதி, அனைவரையும் வரவேற்றர்.

வருகிற டிசம்பர் 27-ம் நாள் 'பாலர் அரங்கி'ல் மாநாட்டினை நடத்துவது என்றும், மாநாட்டில் மாலையில் கருத்தரங்கும் கவியரங்கும் நடத்துவது எனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பெற்றன.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் காலையில் மாநாட்டினைத் தொடக்கி வைப்பார்.

கழகத்தின் தலைவராயிருந்த டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களின் உருவப் படத்தை உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் திறந்துவைப்பார்.

மாலையில் நடைபெறும் 'கல்லூரிகளில் பயிற்று மொழி' பற்றி நடக்கும் கருத்தரங்கில், பிற துறைப் பேராசிரியர் அறுவர் உரையாற்றுவர்; பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி அவர்கள் இக்கருத்தரங்குக்குத் தலைமை வகிக்கிறர்.

புலவர் அறுவர் பங்குகொள்ளும் தமிழ்ப் பண்பாடு' பற்றிய கவியரங்கு ஒன்றும் நடைபெறும்.

முன்னுள் மாலையில் பொதுக் குழுவும், மாநாட்டன்று பகலில் தமிழாசிரியர் பொதுப் பேரவையும் கூடித் தீர்மானங்களை ஆய்ந்து முடிவு செய்யும்.

மாநாட்டுச் செயலாளர் புலவர் மி. ச. நடேசன் நன்றி கூறினர்.

டிசம்பர் 20-ந் தேதிக்குள்ளாகத் தீர்மானங்களை, 'எண் 23, நான்காம் கிழக்குக் குறுக்குத் தெரு, சென்னை—30' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தமிழாசிரியர்களை வரவேற்புக் குழுவினர் வேண்டிக்கொள்கின்றனர்.

கச்சத் தீவுப் பிரச்சினை கிடப்பில் போடப்படும்?

இலங்கை ஏட்டில் தகவல்

கொழும்பு, டிச. 4—

கச்சத் தீவுப் பிரச்சினை கிடப்பில் போடப்படும் என்று டில்லியிலிருந்து வரும் செய்திகள் கூறுவதாக 'சிலோன் அப்சர்வர்' என்னும் பத்திரிகை வருத்தம் தெரிவித்திருக்கிறது.

இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியர் பணம் எடுத்துச் செல்வதற்குள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்று திரு. டட்லி சேனநாயகா தாராள அறிகுறி காட்டியிருப்பதைக் குறிப்பிட்டு, 'கச்சத் தீவுப் பிரச்சினையில் இந்தியாவும் அதே மாதிரி நல்லெண்ணம் காட்டியிருக்க வேண்டும்' என்று அப்பத்திரிகை கூறுகிறது.

கச்சத் தீவுப் பிரச்சினையில் இந்தியாவிலுள்ள தீவிரக் கருத்துக் கொண்டவர்கள் அரசியல் தகராறுகளைக் கிளப்புவார்கள் என்பதற்காகப் பிரச்சினையைக் கிடப்பில் போடுவதென்றல், இந்தியாவுக்குத் திரும்பும் இந்தியர் பணம் எடுத்துச் செல்லும் விஷயத்தில் தீவிரக் கருத்துக் கொண்டவர்கள் இலங்கையிலும் இருக்கிறர்கள் என்றும், ஆனலும், இலங்கைத் தலைமையமைச்சர் தனக்கு வரக்கூடிய எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தாராளம் காட்டியிருக்கிறர் என்றும் அந்த ஏடு சுட்டிக் காட்டுகிறது.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

டிச. 7, 8: நாகர்கோயில்; 15: திருச்சி; 21: பொள்ளாச்சி.

செயற்கை உறுப்புக்கும் இயற்கை அசைவு

பிரிட்டிஷ் விஞ்ஞானி கண்டுபிடிப்பு

செயற்கை கால், கை பொருத்திக் கொண்டுள்ள மனிதர்கள் நடப்பதும், கையாட்டுவதும் விசித்திரமாகத் தோன்றும் -- அல்லது சிறிது மாறுபட்டு இருக்கும்; காரணம், உடலின் பிற உறுப்புகளுடன் இணைந்து இந்தச் செயற்கை உறுப்புகள் இயங்குவதில்லை. ஓர் இயற்கையான --- இணைந்த இயக்கம் இல்லாத காரணத்தால்தான் விசித்திரமாகத் தோன்றுகிறது.

இதற்கு ஒரு மாற்று வழி கண்டுபிடித்துள்ளனர் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள். எலக்ட்ரானிக் கருவி ஒன்றை உடலில் பொருத்தி அதன்மூலம் இந்தச் செயற்கை உறுப்புகள் உடலின் பிற பகுதி சதைகள் அசைவுக்கு ஏற்ப இணைந்து இயங்கச் செய்யமுடியும் என்று கண்டுபிடித்துள்ளனர்.

'எம்கார்' எனப்படும் ஒரு தீக்குச்சியில் பாதி அளவுள்ள இந்தப் புதிய கருவி, செயற்கை உறுப்பின் உள்ளே வைக்கப்படுகிறது. இந்தச் செயற்கை உறுப்பு உடலோடு சேரும் இடத்தில் இந்தக் கருவி இயங்குவதற்குத் தேவையான 'சக்தி' வழங்கும் 'செல்' வைக்கப்படுகிறது. உடலின் உண்மை உறுப்புக்கள் அசையும் போது இந்த 'செல்' இயங்குகிறது; அதிலிருந்து மின்சக்தி உள்ளே வைக்கப்பட்டிருக்கும் கருவிக்குப் பாய்ந்து, உடலின் உண்மை உறுப்புகளின் அசைவுக்கு ஏற்ப அந்தச் செயற்கை உறுப்பையும் இயங்கி வைக்கிறது.

இதில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றல், செயற்கை உறுப்பின் உள்ளே புதைத்து வைக்கப்படும் 'எக்மார்' என்ற கருவியில் 'செல்' ஏதும் இல்லை; 'ஒயர்' ஏதும் கிடையாது; எனவே, 'இது தீர்ந்துவிடுமோ -- எடுத்து எடுத்து மாற்றவேண்டுமோ' என்ற கவலையே வேண்டாம்; ஒருமுறை வைத்துவிட்டால் ஆயுளுக்கும் அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம்.

'தமிழ்நாடு' பெயர் சூட்டியதற்கு நன்றி

சேலம் நகராட்சி மன்றத்தில் தீர்மானம்

சேலம், டிச. 4—

28—11—68-ல் சேலம் நகராட்சிக் கூட்டம் தலைவர் ஆர். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது; அவ்வமயம், தமிழ்நாடு என்று பெயர் வைக்கத் தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் ஒருமனதாக அங்கீகரித்ததற்காகத் தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கும் மத்திய அமைச்சர்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளலாமென எஸ். மெய்யப்பன் (தி.மு.க.) கொண்டுவந்த தீர்மானத்தை எம். ஆறுமுகம் (காங்) வழிமொழிந்தார்; தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

அடுத்து, 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கத் தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்ததற்காக முதலமைச்சர் அண்ணுவுக்கும், அதை ஒருமனதாக நிறைவேற்றிய தமிழகச் சட்டமன்றத்திற்கும் நன்றி தெரிவிக்கலாமென எஸ். மெய்யப்பன் (தி.மு.க.) கொண்டுவந்த தீர்மானத்தை சையத் பாட்சா (காங்) வழிமொழிந்தார்; தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மறைவு

நீண்ட நாட்கள் சுயமரியாதை இயக்கத் தோழரும் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய காலந்தொட்டு கழக ஊழியருமான இராயப்பன் அவர்கள் திடீரென இயற்கையெய்தினர்; அன்னரது பிரிவினல் வாடும் அவரது குடும்பத்திற்கு மதுரை நகர் 16-வது வட்டார தி. மு. க. சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

பேராசிரியர் அன்பழகன் திரும்பினார்

விமானநிலையத்தில் அமைச்சர்கள் வரவேற்றனர்

சென்னை, டிச. 5—

நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள், தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றிரவு 10-30 மணிக்கு விமானமூலம் சென்னை வந்தடைந்தார்.

மீனம்பாக்கம் விமானநிலையத்தில் அமைச்சர்கள் கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, மாதவன், முத்துசாமி மற்றும் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., க. இராசாராம் எம்.பி., மதுரை முத்து எம்.எல்.சி., மன்னை ப. நாராயணசாமி, அரசு வழக்கறிஞர் பு. ரா. கோகுலகிருஷ்ணன், கே ஏ. கிருஷ்ணசாமி, கோவை செழியன், க. அறிவழகன் எம்.எல்.சி., ந. வீராசாமி எம்.எல்.ஏ., ஆண்டிமடம் இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. சா. கணேசன் எம்.சி., தணிகாசலம் எம்.சி., கே. பி. சுந்தரம், தஞ்சை கோபால், டாக்டர் கலாநிதி, இராமானுசம், மணிவண்ணன், திருமதி குப்பம்மாள், வேலாயுதம், புலவர் வேங்கைமார்பன், மற்றும் நாமக்கல், திருச்செங்கோடு தோழர்களும் மாலையணிவித்து வரவேற்றனர்.

பகாமா தீவில் நடைபெற்ற காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு அமெரிக்காவுக்குச் சென்ற அக். 4-ஆம் நாள் புறப்பட்ட பேராசிரியர் அன்பழகன் அவர்கள், பல்வேறு நாடுகளுக்கும் சென்று நேற்று சிங்கப்பூர் வழியாக சென்னை திரும்பினார்கள்.

ஆழ்கடல் துறைமுகத் திட்டம்

டெல்லி அமைச்சர் தகவல்

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவிலுள்ள பெரும்பாலான பெரிய துறைமுகங்களில் ஆழ்கடல் துறைமுகத் திட்டம் மேற்கொள்ளப்படும்"

என்று மத்திய அரசின் சப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் வி.கே.ஆர்.வி. ராவ் தெரிவித்திருக்கிறார்.

"ஒவ்வொருமாநிலத்திலும் சிறிய துறைமுகத் திட்டம், நான்காவது திட்ட காலத்தில் ஏற்று நடத்தப்படலாம்" என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கைக் கோள்

இந்தியா செலுத்தும்

புதுடில்லி, டிச. 5—

"இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட செயற்கைக் கோள் ஒன்றைச் செலுத்துவதென்று திட்டமிடப்பட்டிருக்கிறது"

என்று அணுசக்திக் குழுத் தலைவர் டாக்டர் விக்ரம் சாராபாய் தெரிவித்துள்ளார்.

செயற்கைக் கோளைச் செலுத்துவதற்கென நான்கு கட்ட ராக்கெட் ஒன்றை உருவாக்க எண்ணியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இப்போதைய இரண்டு கட்ட ராக்கெட் 180 கிலோ மீட்டர் உயரத்திற்குத்தான் செல்கிறதென்றும், உத்தேச நாலு கட்ட ராக்கெட் சுமார் 2,000 கிலோ மீட்டர் உயரத்தை எட்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்குக் கடலோரப் பகுதியில் நாலு கட்ட ராக்கெட்டைச் செலுத்தும் தளத்தை அமைப்பதென்று உத்தேசித்திருப்பதாகவும் அவர் கூறினார்.



சென்னையில் :

குளோப்--ஸ்ரீ கிருஷ்ணா--சரவணா--நூர் ஜஹான்

எதிர்ப்புக்குப் பணிந்தது டெல்லி!

புதுடில்லி, டிச. 5—

"மாநிலங்களின் எதிர்ப்பின் காரணமாக அனைத்திந்தியக் கல்வித்துறை ஒன்றை நிறுவும் யோசனையை அரசு கைவிட்டு விட்டது"

என்று மக்களவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், உள்துறை அமைச்சர் சவாண் கூறினார்.

இந்த யோசனையைச் செயல்படுத்தும் துறையில் ஏற்படும் காலதாமதத்தைப் பற்றி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தபோது தான் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

தஞ்சை மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

தஞ்சை மாவட்ட தி.மு.க. செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அறிவிப்பதாவது:—

"டிசம்பர் 11-ம் நாளன்று தஞ்சைக்கு வருகை தரவிருக்கும் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம், அறிஞர் அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்காக அன்புக் காணிக்கை செலுத்தப்பட விருக்கிறது.

"அதுபோது, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வட்டக் கழகச் செயலாளர்கள், நகர--பெருநகரக் கிளைச் செயலாளர்கள், மற்றும் தனிப்பட்டோர், கழகப் பொருளாளரிடம் தமது அன்புக் காணிக்கையைச் செலுத்த ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

திருச்சி மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிப்பதாவது:—

டிசம்பர் 12-ம் நாளன்று சுருரில் நடைபெறும் விழாவில் கலந்துகொள்ளும் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம், அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்காகத் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த வட்ட --- பெருநகரக் கிளைச் செயலாளர்கள் தங்கள் கழகத்தின் சார்பிலும், தனிப்பட்டவர்களும் அன்புக் காணிக்கைகள் செலுத்திட வேண்டுகிறேன்."

மாற்றுக் கட்சி ஆட்சியைக் கவிழ்க்க கவர்னர்கள் உடந்தை

நாடாளுமன்றத்தில் சுதந்தரா உறுப்பினர் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 4—

"கவர்னர்களின் அதிகாரம் பற்றி மறுபரிசிலனை செய்யப்பட வேண்டும்; ஏனெனில், காங்கிரசல்லாத மாநில அரசுகளைக் கவிழ்க்கக் கவர்னர் பதவி பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்"

என்று நாடாளுமன்ற மக்களவையில், சுதந்தரா உறுப்பினர் பி. கே. தேவ் கூறினார்.

மத்திய-மாநில உறவுகளைப் பற்றிக்கருத்துத்தெரிவிக்கையில்அவர் மாநிலங்களுக்கு அதிகபட்ச சுயாட்சி அதிகாரத்தையும், அதே நேரத்தில் மத்திய தலைமையின் அதிகாரத்திற்கு மதிப்புத் தருவதையும் சுதந்தரா கட்சி விரும்புகிறது" என்றார்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள் :—

	ரூ. காசு
இரா. நெடுஞ்செழியன்	500.00
மு. கருணாநிதி	500.00
என். வி. நடராசன் எம்.எல்.சி.	101.00
'முரசொலி' இதழின் சார்பாக— தோழர் செல்வம் அவர்கள் மூலம்	500.00
'முத்தாரம்' இதழ் சார்பாக	555.00
'மறவன் மடல்' நாளிதழ் சார்பாக	101.00
அமைச்சர் செ. மாதவன்	500.00
வழக்கறிஞர் பு. ரா. கோகுலகிருஷ்ணன்	500.00
முன்னாள் மேயர் வி. முனுசாமி எம்.சி.	500.00
கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.	250.00
எம். சண்முகம் எம்.எல்.ஏ.	250.00
திருமதி மங்களம்மாள் (திரு. இராகவானந்தம் எம்.எல்.சி. துணைவியார்)	250.00
ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.	101.00
காட்டூர் இராமையா	100.00
'மாலைமணி' நாளிதழ் சார்பாக—தோழர்கள் கே. ஏ. கிருஷ்ணசாமி, பி. எஸ். இளங்கோ ஆகியோர் மூலம்	1001.00
சென்னை பார்க்டவுன் பொருட்காட்சி சார்பாக அமைப்பாளர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் மூலம்	501.00
'நம் நாடு' இதழ் அலுவலக ஊழியர்கள் சார்பாக	51.00
சென்னை 8-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் தோழர் இரா. மு. மனோகரன்	25.00
சென்னை—இராயபுரம் அண்ணா நற்பணி மன்றம் சார்பாக செயலாளர் கே. பாலு	5.00
எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி.	500.00
மயிலை டி. கே. கபாலி	301.00
டாக்டர் ஏ. எல். அண்ணாமலை	101.00
டாக்டர் ஏ. எஸ். இராமகிருஷ்ணன்	101.00
சாமுவேல் உம்மன்	101.00
முன்னாள் துணைமேயர் -- துறைமுகப் பகுதி தி. மு. க. செயலாளர் அ. செல்வராசன்	101.00
இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.	100.00
குடந்தை பெருநகரத் துணைச் செயலாளர் அரு. செல்வம்	25.00
தூத்துக்குடி தோழர்கள் இரா. கிருஷ்ணன், ஜார்ஜ், ச. அழகு	15.00
கோபாலபுரம் இளைஞர் தி. மு. க. சார்பில் மு. க. அழகிரி	10.00
சி. பி. சிற்றரசு எம்.எல்.சி.	250.00
கோவை சலவன் வீதி எஸ். டி. பட்டாபி	500.00
சென்னை—18 'கிராபெக்ஸ்' உரிமையாளர் சி. எஸ். பிள்ளை	500.00
மதுரை சொ. கோவிந்தராசன் எம்.எல்,ஏ.	250.00
காட்பாடி தி. மு. க. செயலாளர் அ. பாண்டுரங்கன்	101.00
சென்னை—கிடங்கு தெரு கா. வ. மு. முகைதீன்	51.00
சென்னை—35, சி. எம். இராசகோபால் நாயக்கர்	25.00
சென்னை—23 லோகோ ஒர்க்ஸ் சிற்றுண்டிச்சாலை மேலாளர் எஸ். பக்கிரிசாமி	25.00
கோவை இராச வீதி ஈ. வி. சீனிவாசன்	25.00
சென்னை—4 டாக்டர் இராம அய்யங்கார்	10.00
சென்னை—7 கோ. கண்ணபிரான்	10.00
சேலம் பி. பி. பத்மநபன்	11.00
சேலம் எல். சீனிவாசன், வி. குமரன்	10.00
தமிழக மின்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் -- மின்வாரியக் கணக்காயர் சார்பாக திரு. வெள்ளியங்கிரி மூலம்	101.00
சென்னை-14 பிரமன் அண்டு கம்பெனி	250.00
அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து	500.00
திரு. திரவியம்	100.00
ஆக மொத்தம்	10,365.00

நடக்க இருப்பவை கருணையற்ற செயல்!

நாடாளுமன்றம் எதிர்ப்பு

புதுடில்லி, டிச. 5—

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 36 ரொடிஷிய சுதந்தர வீரர்களின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டது குறித்து, மக்களவையில் ஒருமனதாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

"அவையின் இந்த ஒருமனதான கோரிக்கை, உரிய வட்டாரங்களுக்குத் தெரிவிக்கப்படும்" என்று அவைத் தலைவர் தெரிவித்தார்.

6--12--68

தேவாரம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அப்பனு செட்டியார் திடலில்; தலைவர் : ஓ. கிருஷ்ணமூர்த்தி; பேசுவோர் : கண்ணுசாமி, எஸ். செல்லதுரை, குருசாமி, ஆ. பழனியாண்டி, ச. முத்து, கா. அப்துல் கரீம், இரா. வேலு, அ. தங்கமணி. (மணி—சாமி கலைநிகழ்ச்சி நடைபெறும்).

கலை நிகழ்ச்சி

மதுரை 19-வது வட்டார தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மேலப் பொன்னகரம் முக்கிய வீதியில், ந. சிதம்பரம் தலைமையில், மணிசாமி குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.